CASE NO. CC 77/2022

Date 26.11.2024

பெயர் PW 1 - ராஜேஸ்வரி க/பெ சுப்பிரமணியன்

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எதிரி மகேஸ்வரி எனக்கு உறவினர் கிடையாது என்றால் சரிதான். எதிரி எனக்கு எவ்வளவு நாள்களாக குடும்ப நண்பராக இருந்தார் என்றால் 10 ஆண்டுகளாகத் தெரியும். எதிரியின் உறவினர்கள் பற்றித் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் மேலூாரில் உள்ளது. எதிரி எவ்வாறு எனக்கு பழக்கம் என்றால் பரமேஷ்வரி மூலம் தெரியும். பரமேஷ்வரியும் எதிரியும் மருத்துவமனையில் வேலைப் பார்த்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2) பரமேஷ்வரி மூலமாக எதிரியிடம் நான் 2016 ஆம் ஆண்டு ரூபாய் 4,50,000/- யை மூன்று தவணையாக ரூபாய் 1,50,000/- வீதம் எதிரிக்கு கடனாக கொடுத்தேன் என்றால் சரிதான். நான் எதிரியிடம் பணம் கொடுக்கும்போது காசோலை வாங்கினேனா என்றால் இரண்டு காசோலைகளும் ஒரு புரோ நோட்டும் வாங்கினேன். எதிரி வட்டி கொடுத்தாரா என்றால் ஞாபகமில்லை. நான் எந்தெந்த தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

3) பணம் கொடுக்கும்போது சாட்சி யாராவது இருந்தார்களா என்றால் இல்லை தனியாகத் தான் கொடுத்தேன். காசோலையை நிரப்பி கொடுத்தார்களா அல்லது நிரப்பாமல் கொடுத்தார்களா என்றால் நிரப்பி கையொப்பம் இட்டுக் கொடுத்தார்கள். எவ்வளவு தொகை நிரப்பிக் கொடுத்தார்கள் என்றால் ரூபாய் 5,00,000/- தொகையை நிரப்பிக் கொடுத்தார்கள். முதன் முதலாக கொடுத்த காசோலையில் ரூபாய் 5,00,000/- தொகையை நிரப்பி கையொப்பம் இட்டுக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4) நான் என்ன வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் ரூபாய் 50,000/- ஆண்டு வருமானம் ரூபாய் 6,00,000/- ஆகும். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. வரவு செலவு கணக்குகள் அனைத்தும் வங்கி மூலமாக வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் ரூபாய் 5,00,000/- எங்கிருந்து எவ்வாறு கொடுத்தேன் என்றால் மகளிர் குழுவில் ரூபாய் 2,00,000/- வாங்கினேன் மீதித் தொகையை பேத்தி கல்யாணத்திற்காக 5 பைசா வட்டிக்கு கடன் வாங்கி வைத்திருந்த ரூபாய் 3,00,000/- யை கொடுத்தேன்.

5) மகளிர் சுய உதவிக் குழுவில் வாங்கிய கடன் சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியும். நான் ஜவுளிக்கடை நடத்தவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் காசோலையை வசூலுக்காக போட்டபோது அது திரும்பி வந்ததற்கு எதிரியிடம் பேசினேனா என்றால் பேசினேன் அவர் பணம் கொடுப்பதற்கு ஒத்து வரவில்லை. நான் பரமேஷ்வரிக்கு வட்டிக் பணம் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் லதா என்பவருக்கு பணம் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை.

6) பரமேஷ்வரி தான் என்னிடம் மகேஷ்வரியை அழைத்து வந்து நான் வட்டிக்கு பணம் கொடுப்பதாக கூறி அறிமுகப்படுத்தினார் என்றால் பரமேஷ்வரி தான் அறிமுகப்படுத்தினார் நான் மகேஷ்வரிக்கு வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை கைமாத்தாகத் தான் பணம் கொடுத்தேன். நான் மகளிர் சுய உதவிக் குழுவின் மூலமாக ரூபாய் 2,00,000/- ம் பேத்தியின் திருமணத்திற்காக வைத்திருந்த ரூபாய் 3,00,000/-த்தையும் ஆக மொத்தம் ரூபாய் 5,00,000/- தொகையை எதிரிக்கு கடனாக கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

7) எதிரி ரூபாய் 2,15,000/- தருவதாக சமாதானம் பேசினார் என்றால் இல்லை. இரண்டாவது முறையாக ரூபாய் 2,00,000/- எதிரி என்னிடம் கடனாக வாங்கியபோது நிரப்பாமல் கொடுத்த காசோலையை பயன்படுத்தி ரூபாய் 5,00,000/- தொகையை நிரப்பி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு 31.01.2022 ம் தேதி பணம் கொடுத்தேனா என்றால் சரிதான். எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன்.

8) நான் சொல்வது போல் 31.01.2022 ம் தேதியன்று பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அந்தக் காலக்கட்டத்தில் கொரோனா நோய் பரவல் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும் அப்போது எதிரி செவிலியராக பணியாற்றி வந்ததால் அவர் ஒரு வார காலத்திற்கு பணியிலும் இருக்க வேண்டும் என்றும் மறு வாரம் தனிமைப்படுத்தி வீட்டில் இருக்க வேண்டும் என்ற வகையில் பணி செய்து வந்தார். அந்த காலக்கட்டத்தில்வ ரூபாய் 5,00,000/- யை கடனாகக் கொடுத்தேன் என்று கூறுவது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல.

9) இந்த வழக்கின் எதிரி மீது தவறுதலான வழிக்காட்டுதல் படி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஓம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 26.11.2024,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.